செ.வெ.எண் : 995　　　　　　　　　　　　　　　11.11.2010

# கலை பண்பாட்டுத்துறை

## தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் சென்னை மாவட்டக் கலைப் போட்டிகள் நடத்துதல் பற்றிய செய்தி குறிப்பு

## செய்திக் குறிப்பு

கலை பண்பாட்டுத்துறை, தமிழ்நாடு சவகர் சிறுவர் மன்றம் மூலம் மாணவ மாணவியரிடையே பொதிந்து கிடக்கும் கலைத்திறமைகளை ஊக்கப்படுத்திட ஆண்டுதோறும் பல திட்டங்களை அரசு செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில் நடனம், குரலிசை, ஓவியம் ஆகிய கலைகளில் 5–8, 9–12, 13–16 என மூன்று வயது வகையில், ஒவ்வொரு மாவட்டங்களிலும் போட்டிகள் நடத்தி, மாவட்ட போட்டியில் வெற்றி பெற்ற 9–12, 13–16 என்ற வயது வகை பிரிவினருக்கு மாநில அளவிலான போட்டிகள் நடத்தி அதில் வெற்றி பெறுபவர்களுக்கு முறையே ரூ.10,000/–, ரூ.7,500/–, ரூ.5,000/– என மாநில அளவில் முதல் மூன்று இடங்களை வென்றவர்களுக்கு அரசு ஊக்கப்பரிசு வழங்குகிறது.

அவ்வகையில் சென்னை மாவட்ட அளவிலான கலைப் போட்டிகள் 5–8, 9–12, 13–16 என்ற வயது பிரிவினருக்கு நவம்பர் 15, 16, 17 ஆகிய மூன்று நாட்கள் சென்னை அரசு இசைக் கல்லூரி வளாகத்திலுள்ள தாகூர் கலையரங்கில் நடைபெறவுள்ளது. நவம்பர் 15 அன்று காலை 9.30 மணி முதல் நடன போட்டியும், நவம்பர் 16 அன்று காலை குரலிசை, நவம்பர் 17 அன்று ஓவியம் போட்டிகள் நடைபெற உள்ளன.

<u>போட்டி விதிகள்</u>

1. நடனம்

பரத நாட்டியம், தமிழக நாட்டுப்புற நடனங்கள், குச்சிப்புடி, மோகினி ஆட்டம் போன்ற நடனங்களும் ஆடலாம். முழு ஒப்பனை மற்றும் உரிய உடைகளுடன் நடனம் இருத்தல் வேண்டும் திரைப்படப் பாடல்களுக்கான நடனங்கள் மேற்கத்திய நடனங்கள் மற்றும் குழு நடனங்கள் அனுமதியில்லை. பக்கவாத்தியங்களையோ, ஒலி நாடாக்களையோ பயன்படுத்திக் கொள்ளலாம். இவற்றை போட்டியில் பங்கேற்பவர்களே ஏற்பாடு செய்து கொள்ள வேண்டும். அதிக பட்சம் 5 நிமிடங்கள் வரை நடனமாட அனுமதிக்கப்படும்.

2. குரலிசை

கர்நாடக இசை, தேசியப் பாடல்கள், சமூக விழிப்புணர்ச்சி பாடல்கள், நாட்டுப்புறப் பாடல்கள், ஆகியவற்றில் தமிழ் பாடல்கள் மட்டுமே பாட வேண்டும். பக்கவாத்தியக் கருவிகளை

பாடுபவர்கள் மட்டுமே பயன்படுத்திக் கொள்ளலாம். மேற்கத்திய இசை, திரைப்பட பாடல்கள், குழுப்பாடல்கள், அனுமதியில்லை. குறைந்த பட்சம் 3 நிமிடங்கள் பாடலாம், ஒலி பெருக்கியைப் பயன்படுத்தக் கூடாது.

3. ஓவியம்

40x30 செ.மீ அளவுள்ள ஓவியத் தாள்களையே பயன்படுத்த வேண்டும். பென்சில், கிரையான், வண்ணங்கள், போஸ்டர் கலர், வாட்டர் கலர் பெயிண்டிங் என எவ்வகையிலும் ஓவியங்கள் அமையலாம். ஓவியத்தாள், வண்ணங்கள் தூரிகைகள் உட்பட தங்களுக்குத் தேவையானவற்றைப் போட்டியாளர்களே கொண்டு வருதல் வேண்டும். குழுவாக ஓவியங்கள் வரைய அனுமதியில்லை. ஒவ்வொரு வயது வகைக்கும் தனித் தனியாக தலைப்புகள் போட்டி தொடங்கும் போது அறிவிக்கப்படும்.

ஒரே குழந்தை மேற்காணும் மூன்று வகைப் போட்டிகளிலும் கலந்து கொள்ளலாம். மாவட்ட போட்டிகளில் வெற்றி பெறுவர்களுக்கு பரிசுகள், சான்றிதழ்கள் வழங்கப்படும்.

9–12, 13–16 வயது வகைகளில் முதல் பரிசு பெற்ற சிறார்கள் மாநில அளவிலான கலைப் போட்டியில் சவகர் சிறுவர் மன்றச் செலவுகளிலேயே கலந்து கொள்ளவும் வாய்ப்பு அளிக்கப்படும் மாநில அளவில் வெற்றி பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000/– இரண்டாம் பரிசு பெறும் மாணவர்களுக்கு ரூ.7,500/– மூன்றாம் பரிசு பெறும் மாணவர்களுக்கு ரூ.5,000/– மற்றும் பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது.

இப்போட்டிக்கான ஏற்பாடுகளை கலை பண்பாட்டுத்துறை ஆணையர் திரு. ப.அ. மணி, இ.வ.ப., அவர்கள் செய்து வருகிறார்கள். மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண். 2461 8162

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

ஆணையர்.
ஆணையர்
கலை பண்பாட்டு இயக்ககம்
சென்னை-600 028.